மேலத்திருச்செந்தூர் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.ஐ. மகாராஜன்

ஊ.நி.மனைப்பிரிவு : 16/2023 – 2024 நாள்: 03.05.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி – தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம், மேலத்திருச்செந்தூர் ஊராட்சி கிராமம் சர்வே எண்: 480/1B1A -ல் 4050 ச.மீ (1ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவு கடை எண் 01 மற்றும் மனை எண் 01 முதல் 13 வரை மனைப்பிரிவு அனுமதி வழங்கி உத்தரவிடல் - கொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண்: 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 166, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்: 29.11.2018
3. தூத்துக்குடி மாவட்டம், நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் நகர்/ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: Roc No: JJBZ12BK/THOOTHUKUDI/2023/2024/TCP நாள்: 06.10.2023
4. திரு.சு.சுதாகர் நாராயணன் என்பவரது இணையதள விண்ணப்பம் JJBZ12BK நாள்: 06.10.2023 மற்றும் ஊராட்சியில் விண்ணப்பம் அளித்த நாள்: 23.02.2024
5. ஆவண எண்: 3503/2023 நாள்: 01.12.2023
6. ஊராட்சி மன்றத் தீர்மான எண்: 14 நாள்: 28.02.2024.

உத்தரவு:

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியம் மேலத்திருச்செந்தூர் ஊராட்சி, கிராமம் சர்வே எண்கள் 480/1B1A -ல் 4050 ச.மீ (1ஏக்கர்) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு மனைகளுக்கு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கும் பொருட்டு, பார்வை3-ல் காணும் கடிதத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும்

திட்ட அனுமதிக்கும் ம.வ/தூமா அ.எண்:16/2024 எண்ணிடப்பட்டு, தூத்துக்குடி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள கடை 1 மற்றும் மனை எண்கள்: 01 முதல் 13 வரை மனைப்பிரிவு அனுமதி செய்திட கீழ்க்கண்டவாறு கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளது.

5. மேலத்திருச்செந்தூர் ஊராட்சி, மேலத்திருச்செந்தூர் கிராமம் சர்வே எண்: 480/1B1A அமையப்பெற்ற கடை 1 மற்றும் மனை எண்: 01 முதல் 13 வரை உள்ள மனைகளுக்கு கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000- வீதம் ரூ.14,000 ரசீது எண்: 003218 நாள்: 03.05.2024 படி ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.
6. திருச்செந்தூர் சார்பதிவாளர், இணையதள வழிகாட்டு மதிப்பின் படி மனையிடத்திடத்திற்கான சந்தைநில மதிப்பீட்டுத் தொகையில் 3% தொகையினை ரூ.98,415/- அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
7. மேலும் பார்வை (5)-ன் படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலை மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான அசல் ஆவணங்கள் ஊராட்சியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
8. உரிய கட்டணங்கள் அனைத்தம் மனுதாரரால் செலுத்தப்பட்டு விட்டதால் மேலத்திருச்செந்தூர் ஊராட்சி, மேலத்திருச்செந்தூர் கிராமம், சர்வே எண்: 480/1B1A -ல் அமைந்துள்ள கடை 1 மற்றும் மனை எண்கள்: 01 முதல் 13 வரை உள்ள குடியிருப்பு மனைகளுக்கு பார்வை (6)-ல் கண்ட மேலத்திருச்செந்தூர் ஊராட்சி தீர்மானத்தின் படி மனைப்பிரிவு அனுமதி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி மனையின் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

பார்வை 3-ல் கண்ட செயல்முறை ஆணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனை – மனைகளுக்கு பொருந்தும்.

பெறுநர்

Thiru.S.SUDHAKAR NARAYANAN,

No.4/74, North Muslim Street,

Kurumbur,

Tiruchendur Taluk – 628207

Thoothukudi District.

நகல்:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்கள், தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம்.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், திருச்செந்தூர்
4. சார்பதிவாளர் அவர்கள், திருச்செந்தூர்
5. இருப்பு கோப்பிற்கு

தலைவர் 3.5.24

ஊராட்சி மன்றம்
மேலத்திருச்செந்தூர்
தூத்துக்குடி மாவட்டம் - 628 213.